ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2011) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

(இ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2011

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2011), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

[2011 ஆகஸ்ட் 30

*__மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/ 2011@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

பிற்பகல் 6—25

__மாண்புமிகு பேரவைத் தலைவர்:__ மாண்புமிகு உறுப்பினர்கள் யாராவது கருத்துகள் கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

*__திரு. க. பாலகிருஷ்ணன்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறை இட ஒதுக்கீடு சுழற்சி முறையில் வருவது என்பது ஏற்கெனவே உள்ள சட்டத்தில் இருக்கிறது. அதிலே குறிப்பாக, பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, கொட்டக்காச்சியேந்தல் என்கிற சில ஊராட்சிகளில் நீண்டகாலமாக அந்த இட ஒதுக்கீடு இருந்தாலும்கூட, அங்கு முறையான தேர்தல் நடந்து, அங்கு முறையாக தலித் மக்கள் நிர்வாகிகளாக இருக்க முடியவில்லை. கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் தேர்தல் நடைபெற்று அங்கு பதவி வகித்து வருகிறார்கள். எனவே, பத்து ஆண்டுகள் முடிந்து விட்டன என்கிற அடிப்படையில், அந்தச் சுழற்சி முறைப்படி இட ஒதுக்கீட்டை மாற்றி விடாமல்— ஏனென்று சொன்னால் அந்தப் பொறுப்பை அவர்கள் முழுமையாக நிருவகிக்கவில்லை. எனவே, இந்த முறை சுழற்சி முறையில் வருகிறபோது பத்து ஆண்டுகள் முடிந்துவிட்டன என்கிற காரணத்தினால், அதனை மாற்றி விடாமல் அதனை மேலும் தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

__மாண்புமிகு பேரவைத் தலைவர்:__ மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

*__திரு. பி.வி. கதிரவன்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறை சுழற்சி என்பது சட்டத்தில் இருக்கிறது. ஆனால், என்னுடைய தொகுதியில் மதுரை மாவட்டத்தில்

@ 30—8—2011 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

உள்ள பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், விருதுநகர் மாவட்டத்தில் உள்ள கொட்டக்காச்சியேந்தல் ஆகிய நான்கு பஞ்சாயத்துகளுக்கு மட்டும் 15 ஆண்டுகள் முடிந்துவிட்டன. அங்கே தாழ்த்தப்பட்ட மக்கள் தலைவராக இருந்து வருகிறார்கள் என்பதனை மறுக்கவில்லை. அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய உரிமையைக் கொடுக்க நாங்கள் யாரும் தடையாக இருக்கவில்லை. ஆனால், அதேநேரத்தில் 15 ஆண்டுக்காலம் அந்தப் பகுதி மக்களுக்கு, அதாவது பொதுத் தொகுதியாக அறிவிக்கப்படாமல் இருந்து வருவது குறித்து நான் ஏற்கெனவே மனு கொடுத்திருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும் நான் மனு கொடுத்திருக்கிறேன். 15 ஆண்டுகள், தி.மு.க. ஆட்சியிலே, 5 ஆண்டுகள் சேர்த்துக் கொடுத்துவிட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உரையைச் சுருக்கமாக முடித்து விடுங்கள்.

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைக் கருணைகூர்ந்து பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, கொட்டக்காச்சியேந்தல் ஆகிய பகுதிகளில் கடந்த பத்து ஆண்டுகளில் இட ஒதுக்கீடு என்ற அடிப்படையில் தலித் மக்கள் தலைவராக இருக்க வேண்டும் என்று இருந்தது. ஆனால், அந்த இடங்களில் முழுமையாகத் தேர்தல் நடைபெறாத காரணத்தினால், எல்லா அரசியல் கட்சிகளின் வேண்டுகோளையும் ஏற்றுத்தான் மீண்டும் அந்தப் பகுதியில் இன்னொரு 10 ஆண்டுகளுக்கு தலித் மக்களே தலைவராக இருக்க வேண்டும் என்ற சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதன் அடிப்படையில்தான், கடந்த ஆண்டு தேர்தல் நடத்தப்பட்டிருக்கிறது. இப்போது சுழற்சி முறையில் என்பது இந்தத் தேர்தல் முடிந்து அடுத்த முறைதான் வரப்போகிறது. எனவே, அப்படி வரும்போது பார்த்துக்கொள்ளலாம் என்பதுதான் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் கருத்து. எனவே, இந்த நிலை அப்படியே தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்று இந்த அவையின் மூலமாக, தங்களின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சியாக இருந்தாலும், நகராட்சியாக இருந்தாலும் சுழற்சி முறையில் வர வேண்டுமென்பதில் நாங்கள் தெளிவாக இருக்கிறோம். இங்கே பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, கொட்டக்காச்சியேந்தலில் நடந்தது என்னவென்றால், 1996–லேயே இட ஒதுக்கீடு செய்யப்பட்டு, 2006 வரையில் 10 ஆண்டு காலம் அங்கு யாருமே தேர்தலில் போட்டியிட முடியவில்லை. எனவே, 2006–ல் இருந்து கணக்கு வைத்து, எப்போது தேர்தல் நடந்ததோ அதிலிருந்து கணக்கு வைத்து, பத்து ஆண்டுக்காலம் என்பதை ஏற்றுக்கொள்ளலாமே தவிர, 1996–லிருந்து பத்து ஆண்டுகள் என்று கணக்கு வைப்பது ஏற்புடையதல்ல. எனவே, தேர்தல் நடந்ததிலிருந்து கணக்கு வைத்து 10 ஆண்டு காலம் கணக்கிட வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2001–லிருந்து 2006 வரையில் சம்பந்தப்பட்ட நான்கு ஊராட்சிகளுக்குத் தேர்தல் நடத்தப்படவில்லை என்ற தகவலை இங்கே சொன்னார்கள். அது தவறு. மாண்புமிகு அம்மா அவர்கள் அந்த நான்கு ஊராட்சிகளுக்கும் ஒரு குழு அமைத்து, அமைச்சரவைக் குழு அமைத்து, அங்கே நேரடியாகச் சென்று நிலவரங்களைக் கண்டறிந்து, அங்கே வாழுகின்ற மக்களிடம் இணக்கமான சூழ்நிலையை உருவாக்கி, ஆதி திராவிடப் பெருமக்கள் அங்கே போட்டியிடுவதற்கான சூழ்நிலையை உருவாக்கிட வேண்டுமென்று ஆணையிட்டார்கள். அந்தக் குழுவில் நானும், அப்போது ஆதி திராவிட நலத் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி அவர்களும் சென்றிருந்தோம். சிவகங்கை மாவட்டம், கொட்டக்காச்சியேந்தல் என்ற கிராமத்தில், அந்த ஊராட்சியில் மொத்தமே இருக்கின்ற மக்கள் தொகையில் 16 பேர்தான் ஆதி திராவிடப் பெருமக்கள். அவர்கள் 6 குடியிருப்புகளில், காலனி வீடுகளில் குடியிருந்தார்கள். அந்த 6 குடியிருப்புகளும் பூட்டப்பட்டிருந்தன. அவர்கள் எங்கே இருக்கின்றார்கள் என்பதைத் தெரிந்துகொண்டு பக்கத்திலே இருக்கின்ற நகரத்தில் செங்கல் சூளைகளில் வேலை பார்க்கின்ற நிலை ஏற்பட்டிருந்தது. அவர்களை

நேரடியாக நாங்களே அழைத்து வந்து, தேர்தல் நடத்தப்படுகின்ற சூழ்நிலையை உருவாக்குங்கள் என்று சொன்னோம். அவர்களும் சரியென்று சொன்னார்கள். சரியென்று சொல்லி, அப்புறம் தேர்தல் எல்லாம் அறிவிக்கப்பட்டு, தேர்தல் காலம் வருகின்ற நேரத்தில் அவர்கள் அங்கே தேர்தலில் போட்டியிட முடியாத ஒரு சூழ்நிலையை உருவாக்கி அவர்களாகவே தேர்தலைத் தவிர்த்தார்கள். அவர்களுக்கு எழுதப் படிக்கத் தெரியாது என்ற சூழ்நிலை இருந்தது. "நாங்களெல்லாம் தொழில் சம்பந்தமாக வேறு ஊருக்குச் சென்றுவிடுவோம், எங்களால் ஊராட்சி மன்றத் தலைவர் நிலையிலிருந்து பணியாற்ற முடியாது" என்ற நிலையை அவர்கள் எடுத்து, அந்தத் தேர்தலையெல்லாம் அங்கே நடத்த முடியாத சூழ்நிலை இருந்தது. தேர்தலை நடத்த முடியாத சூழ்நிலை எவ்வாறு இருந்தது என்பதற்கான விளக்கத்தை நான் தந்திருக்கின்றேன். 2001–லிருந்து 2006 வரை அந்தத் தேர்தல்கள் நடைபெற முடியாமல் இருந்ததற்குண்டான காரணங்கள் என்ன என்பதை நான் இந்தச் சபையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 6–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலியாகவுள்ள இடங்களுக்கு 6 மாதங்களுக்கு ஒரு முறை தேர்தல் நடைபெற்றுக் கொண்டேயிருந்தது. இந்த 4 பஞ்சாயத்துகளிலும் 6 மாதங்களுக்கு ஒரு முறை தேர்தல் நடைபெற்றது. அதில் தாழ்த்தப்பட்டவர்கள் வெற்றி பெற்றார்கள், இருந்தார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோன்று, அவர்களால் இருக்க முடியாமல், அவர்களே வேறு இடத்திற்குச் சென்று விடுகிறார்கள். அவர்களால் அங்கே இருக்க வாய்ப்பில்லாததால்தான் அடுத்தடுத்து தேர்தல் வந்ததேதவிர, யாரும் அந்தப் பகுதியில் யாரையும் துன்புறுத்தி, அதுபோன்ற செயல்களே நடைபெறவில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். 15 ஆண்டுக்காலம் இது இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலித்து, பொதுத் தொகுதியாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரையை முடியுங்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர். (குறுக்கீடு) இல்லை, இல்லை. அமைச்சர் பதில்

சொல்வார். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி, நகராட்சிகளில் நடக்கின்ற இந்தத் தேர்தல்களில், குறைந்தபட்சம் 20 வார்டுகளும், அதிகபட்சம் 52 வார்டுகளும் இருக்கக்கூடிய அளவிலே தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்று ஏற்கெனவே இருந்ததை இப்போது மாற்றி குறைந்தபட்சம் 15 வார்டுகளாகவும், அதிகபட்சம் 52 வார்டுகளாகவும் அமைப்பதற்காகத்தான் இந்தச் சட்டமுன்வடிவை உங்களிடத்திலே நாங்கள் கொடுத்திருக்கிறோம். இந்தக் கருத்தைச் சொல்லாமல், தடம் மாறி நீங்கள் இப்போது சென்று கொண்டிருக்கிறீர்கள். நாங்கள் எதற்கு இங்கே இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வந்தோமோ அதைப்பற்றிப் பேசாமல், அடுத்தவொரு நிகழ்ச்சிக்குச் சென்றிருக்கிறீர்கள்; பரவாயில்லை. இருந்தாலும் அதற்கும் நான் பதில் சொல்ல இருக்கிறேன். எனவே, இந்தச் சட்டமுன்வடிவை ஆதரித்து நீங்கள் நிறைவேற்றித் தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடுமட்டுமல்லாமல், இன்று தமிழகத்தில் இருக்கின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஒவ்வொரு தனி மனிதனுடைய உணர்வுகளுக்கும், அவர்களுடைய ஆசாபாசங்களுக்கும் கட்டுப்பட்டு, அவை நியாயமாக இருக்கின்றபட்சத்தில், உடனடியாக நடவடிக்கை எடுக்கக்கூடிய ஒரு மகோன்னத தலைவராக இப்போது விளங்கிக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உதாரணத்திற்கு எடுத்துச் சொல்வோம் என்றால், மிகப் பெரிய அளவிலே உலகம் முழுவதும் பல்வேறு வகையான கருத்துப் பரிமாற்றங்கள் உள்ள ஒரு நிகழ்ச்சி. ராஜீவ் காந்தி கொலை வழக்கிலே மரண தண்டனையை எதிர்நோக்கியிருக்கிற அவர்களுக்கு, பல்வேறு வகையான விமர்சனங்கள், நிறைய பேர் உண்மையாகவே, மனதார அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தோடு, வெளியில் பேசாமல் இதிலே எந்த அளவிற்கு அரசியல் ஆதாயம் சம்பாதிக்கலாம் என்பதற்கான அடிப்படையில்தான் பல்வேறு தலைவர்கள் நீலிக் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நேற்று, தான் முதலமைச்சராக இருக்கின்ற இந்தப் பதவியில் இருந்து என்ன செய்ய முடியும் என்பதை விளக்கிக் கூறினார்கள். இன்று ஒரு தாயாக, ஒரு மனிதாபிமான உணர்வோடு அந்த 3 பேருடைய உணர்வுகளையும், அந்த 3 குடும்பத்தினுடைய உணர்வுகளையும் (மேசையைத் தட்டும் ஒலி) நளினியினுடைய மகளாக இருக்கிற, முருகனுடைய மகளாக இருக்கிற அந்தப் பெண்ணினுடைய உணர்வுகளையும் மதித்து, சட்டத்தைத் தாண்டி,

2011 ஆகஸ்ட் 30] [திரு. கே.பி. முனுசாமி]

சட்டத்திற்கு அப்பாற்பட்டு, மனித நேயத்தோடு, தர்மத்தோடு இன்று அரசினர் தனித் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று சொன்னால் (மேசையைத் தட்டும் ஒலி) இது எவ்வளவு பெரிய நிகழ்வு? இதற்கே அவர் முடிவெடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால், இந்த கொட்டகாச்சியேந்தல், பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி இதையெல்லாம் அரசியல் ஆக்காமல் இருந்தாலே போதும்; முறையாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்தத் தேர்தலை நடத்துவார்கள் என்பதை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாட்டார்மங்கலமும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: தயவுசெய்து இச்சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தரும்படி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உங்களையெல்லாம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருத்தங்கள் எல்லாம் சொன்ன பிறகுதான் 'நிறைவேற்றித் தர வேண்டும்' என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோர வேண்டும். (குறுக்கீடு) இப்போது இல்லை. இப்போது உங்களுடைய பதிலுரை மட்டும்தான்.

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள். இப்போது நிறைவேற்றக் கோருங்கள்.

பிற்பகல் 6–35

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2011) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.